உ

முருகா சரணம்




# முருகன் திருவருட் சங்கம்


(Society Regn. No. 137/2024)

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005

ஸ்தாபிதம் : 1954 தொலைபேசி எண் : 2854 4713


சீல **முருகன் திருவருட் சங்கம்** உயர்
வேலன் கருணையினால் மேன்மையுடன் - ஞாலமிசை
அன்பர் எலாம் கூடி அரியபல தொண்டியற்றி
இன்பமுடன் வாழ்க இனிது - திருமுருக கிருபானந்த வாரியார் ஸ்வாமிகள்

## 2026 அக்டோபர் மாதத்திய திருப்புகழ் பஜனை நிகழ்ச்சிகள்

| | | | |
|---|---|---|---|
| 04.10.2026 | ஞாயிறு | **மாலை 3.00 மணி** | **ஸ்ரீ திருச்செந்தூர் வேல் முருகன் ஆலயம்**<br>310ஆவது அபிஷேக பஜனை வழிபாடு<br>ஸவீதா பல் மருத்துவக் கல்லூரி வளாகம்,<br>சென்னீர் குப்பம், பூவிருந்தவல்லி, சென்னை 77<br>☎ 98400 46027 |
| 11.10.2026 | ஞாயிறு | **மாலை 5.00 மணி** | **ஸ்ரீ K.R. கங்காதரன்**<br>சாய்நிலையம், 4/26, 7ஆவது பிரதான சாலை<br>**R.A.** புரம், சென்னை 600 028 ☎ 99411 73636 |
| 17.10.2026 | சனி | **காலை 8.30 மணி** | **உஞ்சவிருத்தி பஜனை (3)**<br>**Dr. ரேவதி அனந்த்**<br>(அஸ்வத்த வைபவ மருத்துவமனை) ஸுந்தரராஜன் தெரு<br>அபிராமபுரம், சென்னை 600 018<br>☎ 98840 34681/98404 92506 |
| 18.10.2026 | ஞாயிறு | **மாலை 5.00 மணி** | **ஸ்ரீ ஸத்யா நந்தா யோகா மையம்**<br>No.4. T.P. Koil 2வது சந்து<br>ஐஸ்ஹவுஸ், திருவல்லிக்கேணி,<br>சென்னை 600 005 ☎ 98417 38069 |
| 24.10.2026 | சனி | **காலை 9.00 மணி** | **உஞ்சவிருத்தி பஜனை (4)**<br>**ஸ்ரீ T.N. மோஹன்**<br>ஸ்ரீ ராம மாருதி சமாஜ், "AVDESH" விக்னேஷ் ஹோம்,<br>ஸ்ரீநிவாஸ்,401, 2ஆவது பிரதான சாலை,<br>அஷ்டலக்ஷ்மி நகர், ஆலப்பாக்கம்,சென்னை 600 116<br>☎ 90031 62480 (Near Velankanni Police out post) |
| 25.10.2026 | ஞாயிறு | **காலை 8.30 மணி** | **உஞ்சவிருத்தி பஜனை (5)**<br>**ஸ்ரீ R. ஸுப்ரஹ்மணியன்**<br>F-2, ஹரிஹண்ட் ஆஞ்சநேயர் குடியிருப்பு<br>9-A, 10ஆவது தெரு, நங்கைநல்லூர்,<br>சென்னை 600 061<br>☎ 94441 50246 (Opp. Giri Trading Book Stall) |
| 27.10.2026 | செவ்வாய் | **மாலை 4.30 மணி** | கார்த்திகை<br>**ஸ்ரீ N. சந்த்ரசேகர்**<br>ப்ளாட் நெ 5/76, Flat No.3, அண்ணா தெரு,<br>(Defence colony) மடிப்பாக்கம், சென்னை 600 091<br>☎ 98418 19009 |

| | | |
|---|---|---|
| 31.10.2026 சனி | **மாலை 5.00 மணி** | திருப்புகழ் இன்னிசைத் திலகம்<br>ஸ்ரீ **T.S. வாஸுதேவன்** பிறந்த தினம்-ஸ்ரீமதி **வித்யா சந்திரசேகர்**<br>பு.எண்.24/1,ப.எண்.22, "ஸ்ரீநிவாஸ்"<br>ஸுப்ரஹ்மணியன் சாலை, பெரம்பூர், சென்னை 600 011<br>(அன்னதான ஸமாஜம் அருகில்) ☎ 90030 40665 |

## 2026 நவம்பர் மாதத்திய திருப்புகழ் பஜனை நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 01.11.2026 ஞாயிறு | **மாலை 5.00 மணி** | **ஸ்ரீ V.P. நாராயணன்**<br>கல்பக விலாஸ் (முதல் மாடி)<br>பு.எண்.11/ப.எண்.6, G.N. செட்டித் தெரு, மயிலை<br>சென்னை 600 004 ☎ 2498 2072/99628 35520 |
| 08.11.2026 ஞாயிறு | | **தீபாவளியை பண்டிகையை**<br>**முன்னிட்டு பஜனை வழிபாடு கிடையாது** |
| 10.11.2026 செவ்வாய் முதல்<br>16.11.2026 திங்கள் முடிய | | **73ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா**<br>**நடைபெறும் இடம் ஸ்ரீ ஸத்யா நந்தா யோகா மையம்**<br>No.4. T.P. Koil 2ஆவது சந்து, ஐஸ் ஹவுஸ், திருவல்லிக்கேணி<br>சென்னை 600 005 ☎ 98417 38069<br>(நிகழ்ச்சி நிரல் ஷஷ்டி விழா அழைப்பிதழில் காண்க) |
| 22.11.2026 ஞாயிறு | **மாலை 3.00 மணி** | **ஸ்ரீ திருச்செந்தூர் வேல் முருகன் ஆலயம்**<br>311ஆவது அபிஷேக பஜனை வழிபாடு<br>ஸவீதா பல் மருத்துவக் கல்லூரி வளாகம்,<br>சென்னீர் குப்பம், பூவிருந்தவல்லி, சென்னை 77<br>☎ 98400 46027 |
| 24.11.2026 செவ்வாய் | **மாலை 4.30 மணி** | திருக்கார்த்திகை (அண்ணாமலை தீபம்)<br>**ஸ்ரீ N. சந்த்ரசேகர்**<br>ப்ளாட் நெ 5/76, Flat No.3, அண்ணா தெரு,<br>(Defence colony) மடிப்பாக்கம், சென்னை 600 091<br>☎ 98418 19009 |
| 29.11.2026 ஞாயிறு | **மாலை 5.00 மணி** | **ஸ்ரீ ஸத்யா நந்தா யோகா மையம்**<br>No.4. T.P. Koil 2வது சந்து<br>ஐஸ்ஹவுஸ், திருவல்லிக்கேணி,<br>சென்னை 600 005 ☎ 98417 38069 |

# 73 ஆண்டுகளாக இறைத்தொண்டில் ஈடுபட்டுக் கொண்டு வரும் ஆன்மிக ஆலயம்

முருகா சரணம்
**V. கணேசன்**
தலைவர்
☎ 94441 45032
93618 55023




**N. சந்த்ரசேகர்**
செயலாளர்
☎ 98418 19009



# உங்கள் குறைவும் என் நிறைவும்
# ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பரமாச்சார்ய ஸ்வாமிகள்

(தொடர்ச்சி)

பட்டண வாழ்க்கை ரொம்பவும் ஒரு தினுசாகப் போய்க்கொண்டிருக்கிறது, என்பதால் நான் கிராமாந்திரங்களிலேயே இருப்பது என்றுதான் சில வருஷங்களாகவே வைத்துக் கொண்டிருந்தேன். பட்டணத்து பக்தர்கள் அடிக்கடி என்னிடம் வந்து, நான் இங்கே வர வேண்டும், வரவேண்டும் என்று ரொம்பவும் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். நான் விடாப்பிடியாக இருந்தும், அவர்கள் விடாமல் வேண்டிக் கொண்டிருந்தார்கள். பிறகு எனக்கே தோன்றிற்று! இத்தனை பேர் இத்தனை பிரியமாகக் கேட்டுக் கொண்டும், வரவே மாட்டேன் என்று நாம் இருந்தால் அது பிடிவாதம்தானே? பிடிவாத சுபாவம் என்பது தப்புதானே? நமக்கு அதுதான் என்னத்துக்கு? பிடிவாதத்தை விட்டுவிடுவோம் என்று சில கண்டிஷன்கள் போட்டு அவைகளை நிறைவேற்றினால் நான் வருவதாகச் சென்னேன். நீங்கள் சிகை வைத்துக் கொள்ள வேண்டும், ஸந்தியா வந்தனம், பிரம்மயக்ஞம் பண்ண வேண்டும் என்றெல்லாம் கண்டிஷன் போட்டேன். இன்னொருத்தரை ஒரு காரியம் பண்ண வைப்பதற்கு சுய அநுஷ்டானம்தான் வழி என்று இத்தனை நாழி சொல்லிவிட்டு, இந்த மாதிரி அதைப்பண்ணு, இதைப்பண்ணு என்று நான் உத்தரவு போட்டது சரியில்லை என்றுதானே தோன்றுகிறது? வாஸ்தவத்தில் நான் அப்படி நிபந்தனை போட்டது, அதன்படி எல்லோரும் பண்ணி விடுவார்கள் என்று எதிர்பார்த்ததால் அல்ல. உத்தரவு போட்டு ஊரை எல்லாம் மாற்றி விடலாம் என்று நினைக்கவில்லை.

பின்னர் ஏன் அப்படிச் சொன்னேன் என்றால், அவர்களாகவே இது நம்மால் முடியாத காரியம் என்று என்னை கூப்பிடுவதை விட்டுவிடுவார்கள் என்ற எண்ணத்தினால்தான். என்னை வரவைக்க வேண்டும் என்பதற்காக மட்டும் சில ஆசார அநுஷ்டானங்களைப் பண்ண ஆரம்பித்தால் அது பிரயோஜனமில்லை. அது சாசுவதமாக இருக்கவும் இருக்காது. அதற்காகவே பிடிமானம் இருந்து செய்தால்தான் ஸ்திரமாக இருக்குமே தவிர, இன்னொன்றை உத்தேசித்து இதைச் செய்தால் நிலைத்து நிற்காது. ஒரு உபயோகமும் இல்லாத காரியத்திற்கு நம்மை பட்டணத்துக்குக் கூப்பிடுகிறார்களே, அவர்களுக்கு ஏதாவது சமாதானமாக இருக்கட்டும் என்றுதான் கண்டிஷன் போட்டேன். பக்தர்கள் கண்டிஷன்படி செய்வதாகவும் தெரியவில்லை. ஆனால் நான் வந்தாக வேண்டும் என்று மட்டும் அவர்களும் வெறுமனே பிடிவாதம் பிடித்தார்கள். கடைசியில் நமக்கு பிடிவாதம் என்கிற கெட்ட ஸ்பாவம் வேண்டாமே என்பதற்காகவே வந்து விட்டேன்.

வந்த பிறகு ஒரு மாசம், ஒன்றரை மாசம், அதிகமாக நான் ஒன்றும் பேசவில்லை. உபந்யாஸம் பண்ணவில்லை. அப்புறம்தான் இந்தக்காரியம் ஆரம்பித்து, போகப்போக ஜாஸ்தியாகிவிட்டது. நித்தியம் காலமே எழுந்திருந்தால் உபந்யாஸம் நடு ராத்திரி வரை என்றாகி விட்டது. ஏதோ கூப்பிட்டார்கள் வந்தேன் என்றால் அதற்காக இப்படி ஒரு நாளைப் போல பேசுவானேன்? உபந்யாஸம் கேட்பதற்கு ஒரு கச்சேரி மாதிரி இருந்திருக்கிறது. பலபேருக்கு கேட்கிறமட்டில் திருப்தியாக இருந்திருக்கிறது. அதன் விளைவும் (Effect) தற்கால சாந்திதான். இது தெரிந்தும் நான் ஏன் இப்படிப் பண்ணிக் கொண்டிருந்தேன், சாசுவத பிரயோஜனம் கொடுக்காதது என்று தெரிந்தே ஏன் கச்சேரி பண்ணிக் கொண்டிருந்தேன் என்றால், இதிலும் ஒரு பிரயோஜனம் தெரிந்ததால்தான். அந்தப் பிரயோஜனம் எனக்குத்தான்! முதலில் நான் இதை நினைத்து லெட்சர் (lecture) அடிக்கவில்லை. ஆனால் போகப் போக அதில் எனக்கு ஒரு பெரிய பிரயோஜனம் ஏற்படுவதாய் தெரிந்தது. என்ன பிரயோஜனம் நான் பல விஷயங்கள் பார்ப்பதில், படிப்பதில் எனக்கு ஏதாவது சந்தேகங்கள் வருகின்றன. பலப்பல பாஷைகள் சிக்கலான சமாசாரங்கள் பார்க்கிற போது, ஒரு பதத்துக்கு அர்த்தம் புரியாத பாஷையில் பேரைப் பார்த்தால் அது இன்னதென்று புரிவதில்லை. இன்னும் இப்படிப் பல சந்தேகங்கள் வருகிறது. நானாகவே இதற்கு புஸ்தகங்கள் தேடி சந்தேக நிவர்த்தி செய்து கொள்வதென்றால், ஒரு சின்ன சமாசாரம் கண்டு பிடிப்பதற்குப் பத்து நாள் கூட ஆகி விடும் ஆனால் இந்தப் பட்டணத்து ஜனங்கள் கூடியிருக்கும் போது பல விதமான சாஸ்த்ரங்கள், சயன்ஸ்கள் எல்லாவற்றிலும் நன்றாகப் படித்தவர்கள், அவர்களில் இருப்பதால், நான் எந்த சந்தேகத்தைக் கூட்டத்திலே எடுத்துப் போட்டாலும் சட்டென்று அதற்குத் தெளிவு ஏற்பட்டு விடுகிறது. எனக்குத்தோன்றும் பலவிதமான சந்தேகங்களையும் உபந்யாஸத்தின் நடுவில் அப்போதைக்கப்போதே தெளிவு செய்து கொள்ள ரொம்பவும் ஸௌகரியமாய் இருந்தது. நான் இங்கே வந்ததில் உங்களுக்கெல்லாம் என்ன பிரயோஜனம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் எனக்கு இப்படிப் பிரயோஜனம் ஏற்பட்டது.

(வளரும்)

முருகா சரணம்

**வே. கணேசன்**